அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், பாசனமற்ற ஏரிகளைப் பராமரிப்பதற்கு மட்டும் அனுமதியைத் தருகிறேன் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அந்த ஏரி பாசனமற்ற ஏரியாக இருந்தால், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் அனுமதியைப்பெற்று, நீங்கள் சொல்கிறபடி அதைத் தரம் உயர்த்தி, நடைபாதை அமைத்து, பூங்கா அமைத்து அனைத்துப் பணிகளும் செய்து தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

இரு வழித்தடச் சாலை

***12927—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து புலியூர் வழியாக கிள்ளுக்கோட்டை வரை செல்லும் சாலையை இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கீரனூர்—கிள்ளுக்கோட்டை சாலை 19.6 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும். இந்தச் சாலையில் 3.8 கிலோ மீட்டர் சாலைப் பகுதியை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரு வழித்தடமாக அகலப்படுத்துகிற பணி இப்போது

2024 ஜூன் 27]

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து, நடப்பாண்டிலே CRIDP (Comprehensive Road Infrastructure Development Programme) திட்டத்தில் 3 கிலோ மீட்டர் சாலைப் பகுதியை 3.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரு வழித்தடமாக அகலப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எஞ்சியிருக்கிற 12.8 கிலோ மீட்டர் சாலையை அடுத்த நிதியாண்டில் அகலப்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளித்து, அதை எடுத்துக்கொள்ளும்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர், பள்ளத்துப்பட்டி, ஒடுகம்பட்டி, புலியூர், விசலூர், விசளிக்கோவில், மலையடிப்பட்டி, கிள்ளுக்கோட்டை வழியாக வரக்கூடிய அந்தச் சாலை என்பது மிக முக்கியமான சாலை. ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்த கண்ணிறைந்த பெருமாள் கோயில் அங்கு இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து பலரும் அந்தக் கோயிலுக்கு வருகை தருகிறார்கள். அந்தச் சாலையில் தற்போது 3 கிலோ மீட்டர் வரை பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் 17 கிலோ மீட்டருக்கு சாலை அமைத்திட வேண்டியிருக்கிறது. விரைந்து செய்து கொடுத்தால் உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். முதற்கட்டமாக இப்போது 3.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்தகட்டமாக, ரூ.3.8 கோடியில் 3 கிலோ மீட்டர் தூரத்தை எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டோம். மூன்றாவது கட்டத்தைத்தான் அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அதோடுமட்டுமல்ல, தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், இதுபோன்ற சாலைகளை எல்லாம், பல ஆண்டு

காலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் சாலை வேண்டும், சாலை வேண்டும் என்று கேட்ட பல மனுக்கள் எல்லாம் கிடப்பிலே கிடந்த காரணத்தினால்தான், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்கிற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சாலைகள் சம்பந்தப்பட்ட மனுக்களைக் கொடுங்கள் என்று கேட்டு, அவை பெறப்பட்டு, இந்த ஆண்டைப் பொறுத்தவரை, ரூ.1,055 கோடி மதிப்பீட்டில் அவற்றையெல்லாம் செயலாக்க இருக்கிறோம். ஆதலால், நீங்கள் கூறியிருக்கும் சாலையை இதிலே எடுத்துக்கொள்ள முடியுமா என்று நான் முயற்சி செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய தொகுதி. சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதிலே மிகப் பெரிய சிரமத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு தொகுதியாக இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளிலே சாலைப் பணி மேற்கொள்ளாமல், மிகப் பெரிய அளவிற்கு புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதியாக வைத்து, சாலைகளைப் போடவிடாமல் தடுத்துவிட்டார்கள். தற்போது பெருமளவிற்கு சாலைகள் அமைக்கப்பட்டிருந்தாலும், குன்றாண்டார்கோவில், கறம்பக்குடி, கந்தர்வகோட்டை பகுதிகளிலே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய RR—கிராம சாலைகள் உட்பட அனைத்து சாலைகளும் போடப்படாததால் மிகப் பெரிய அளவிற்கு பாதிப்பு ஏற்படுகிறது. விபத்துகள் அதிகரிக்கின்றன. குறிப்பாக, கீரனூரிலிருந்து கந்தர்வகோட்டை செல்லக்கூடிய சாலை 31 கிலோ மீட்டர். ஒடுகம்பட்டி, குன்றாண்டார்கோவில், வத்தனாக்கோட்டை, ராசாப்பட்டி, பாப்புடையான்பட்டி, மின்னாத்தூர், ராமுடையான்பட்டி, அரவம்பட்டி வழியாக பிரதான சாலையில் புதுக்கோட்டை–தஞ்சாவூர் சாலையை இணைக்கக்கூடிய 31 கிலோ மீட்டர் சாலையைச் செய்து கொடுத்தால், மிக உதவியாக இருக்கும். குன்றாண்டார்கோவில் பகுதியில் தரைவழிப் போக்குவரத்து அதிகரிப்பதற்கு, சமூகப் பொருளாதார மேம்பாடு உயர்வதற்கு உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

2024 ஜுன் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மானியக் கோரிக்கையில் நான் குறிப்பிட்டேன். பொதுவாக ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் அல்லது அந்த மாநிலம் முன்னேற வேண்டுமென்று சொன்னால் அல்லது அந்த மாவட்டம் முன்னேற வேண்டுமென்று சொன்னால், நம்முடைய பகுதி முன்னேற வேண்டுமென்று சொன்னால் பொருளாதாரத்திற்கு வித்திடுவது நம்முடைய சாலைகள்தான். அதனால்தான் இந்த ஆட்சியிலே 40 சதவிகித மூலதனச் செலவை சாலைப் பணிகளுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்குகிறார்கள். மூலதனச் செலவு என்பது நம்முடைய அரசாங்கத்திற்கு சொத்து சேர்ப்பது. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மக்களுக்கு பயன்பாடு இருக்க வேண்டும், அதேநேரத்திலே மூலதனச் செலவு செய்து அரசாங்கத்திற்கு சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் காரணத்தினால்தான், நீங்கள் சொன்னதுபோல் 10 ஆண்டுகளாக பாராமுகமாக இருந்த சாலைகளை எல்லாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை, மாநில நெடுஞ்சாலை என்று மூன்றாக வகைப்படுத்தி ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் கேள்வியை நாங்கள் எடுத்துக்கொண்டு, துறை சார்ந்த அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, இந்த நிதியாண்டிலே அப்பணிகளை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

மின்மாற்றி

***22807—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—